ஓலை 36 | ஓசை 135 | ஏப்ரல் 2023

அகர முதல இலக்கிய பேரவை

அகமும் தமிழே!
முகமும் தமிழே!!

# அகர முதல
# இலக்கிய பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# அறிவோம் வள்ளுவம்!



**தாமின் புறுவ துலகின் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்.**

தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு, கற்றறிந்த அறிஞர் மேன்மேலும் (அக் கல்வியையே) விரும்புவர்.

**Translation:**

Their joy is joy of all the world, they see; thus more
The learners learn to love their cherished lore

**Explanation:**

The learned will long (for more learning), when they see that while it gives pleasure to themselves, the world also derives pleasure from it.


/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

### நிர்வாக குழு

**கு.செல்வமுத்துக்குமரன்**

**சிவம் அறக்கட்டளை**

### ஆசிரியர்கள்

**அ.வில்சன்**

**குமர.தர்மசீலன்**

### வடிவமைப்பு

**அ.வில்சன்**

## அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001


## அகர முதல இலக்கிய பேரவை


Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# பிறைகள்

இமைகள் மூட
கண்கள்
திறந்தன
தியானம்
விழித்துக்
கொண்டது

தோட்டாக்களும்
துப்பாக்கியும்
பொம்மைகள்
கைகள்
தூக்கும்
வரை

மூங்கில் காடே
புல்லாங்குழலின்
ஓவியத்தை
மட்டும்
வைத்துக்கொண்டு
என்ன செய்வது

வளைந்த
பாதைகளில்
கூட
கால்கள்
நேராகத்தான்
செல்கின்றன



முன்
கண்ணாடி
முகம் காட்ட
பின்
கண்ணாடி
அகம் காட்டுகிறது

யாராவது
கடிதம்
போடுங்கள்
இப்படிக்கு
தபால் பெட்டி

உன்
விழிக் குளம்
அருவியாகும்
போதெல்லாம்
சமுத்திரத்தின்
சுவை

கவிஞர் அன்னலெட்சுமி சரவணன், ஈரோடு

# கையறுநிலை

நற்சங்கம் வைத்து தமிழ் வளர்த்த நாட்டை சுரங்கம் வெட்டியா சுரண்டுவது
நிலத்தைப் பிடுங்கி நம் நாட்டில் நாமே நாடோடிகளாய் திரியும் அவலம் இது
நிலக்கரி சுரங்கம் தோண்ட பூர்வ குடிகளை இடம் கடத்தும் கேவலம் இது
நாட்டிற்கு வெளிச்சம் தர நாதியற்ற மக்களை இருட்டில் தள்ளும் கொடுமையிது
நிலமகளைத் துகில் உரித்து மெய் கிழித்து எத்துணை கரிகள்தான் எடுப்பது
நிலமகளும் வெகுண்டு நிலநடுக்கமாய் நமை விழுங்கும் நாளும் நெருங்குது

நிலத்தில் எல்லாம் சுரங்கம் தொழிற்சாலை அமைத்துவிட்டு நிலவில் சென்றா வாழ்வது?
நிதமும் விஞ்ஞான வளர்ச்சி என்ற பெயரில் நிலமகளை எதுவரை மலடாக்குவது?
நிலக்கரி ஆற்றலுக்கு மாற்றாகச் சூரிய ஆற்றல் இருக்கச் சுரங்கம் ஏன் வெட்டுவது
நிறுத்துங்கள் அனைத்தையும் போதும் இந்த துகிலுரிப்பு மற்றும் கருவறுப்பு
நிலமகளுக்கு வரும் காலத்தில் பச்சைப் பசேல் சேலை கட்டி வளைகாப்பு எடுப்போம்
நாம் வணங்கும் சீதா ராமா சாமிகளே வாழுங்கள் எங்களையும் வாழவிடுங்கள்.



கவிஞர் பா.இராஜசேகர்,சிதம்பரம்

# எருக்கன் இலை

எருக்கிலையைக் கிள்ளித்தான் ஏழெட்டு சொட்டு
நறுக்குனு புண்மீது நாலுநாள் விட்டா
இருக்குமிடம் காணாதே எவ்வகை புண்ணும்
அருமருந் தாகும் அது



கவிஞர் கவிதா சீனிவாசன்,கோவை

# கண்ணீரில் பட்டாம்பூச்சி

மகனை மட்டும் பெற்றவள்
மகளாய் வளர்க்கிறாள்
பேத்தியை

நடை பயின்ற பிறகும்
விடாது சுமக்கிறாள்
பூவை போல்

வெயில் சுமந்து வியர்வையோடு
வீடு திரும்பும் தூக்குச்சட்டியில்
சொடக்குத்தக்காளி



நீ யார் பொண்ணென்று
கேட்கும் போதெல்லாம்
கொடி அசைந்ததும்
பூவைப் பிரியும் வண்டாய்
பாட்டி பொண்ணென்று
வந்து விழும் சொல்

கால் முறிந்த கட்டைப்பார்த்து
பேத்தி அழுகையில்
மறைத்து வைக்கிறாள்
வலியை எல்லாம்

இதுவரை இருந்தவள்
இல்லாமல் போனதும்
உருகும் மழை விழியோடு
உறைந்து போகிறாள்

சுடுகாட்டுக்கு செல்லும் வழியில்
முச்சந்தியில் வளர்த்த பேத்தி
பாட்டிக்கு பெற்ற மகளாய்
நீர்க்குடம் உடைக்கையில்
அவள் அப்பாவின்
அழுகை சத்தம்.

கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,சென்னை

# உழவு

வானம் பார்த்த பூமியில்
தானியம் பயிரிடவே
தொடிப்புழுதி கஃசா உணக்கியே
இடிச்சத்தம் கேட்டிடும் நாளை
காளை அவன் எதிர்ப்பார்த்தான்.
வெண்முகில்கள் சட்டென்று
கருமுகில்கள் ஆகக் கண்டே
உலர்ந்த விதை எடுத்துக் கொண்டே
அயர்ச்சியை உதறித் தள்ளி
கலப்பையைத் தோளிலேற்றி
உற்சாக நடை நடந்தான்.
இடியோடு மின்னலங்கே இடித்து
மழையைத் தெளித்திடவே
இன்ப நடை அவன் நடந்தான்.

மண்மகளின் மேனியில்
தண்ணென்ற நீர் நிறைக்க
ஏரெடுத்து உழுத தடத்தில்
ஏற்றமோடு விதை தூவ
ஏந்திழையும் விரைந்து வந்தே
உழவனுக்கு உதவிடவே
கண்ணாடி வளையல் சத்தம்
கலகலப்பாய் இசையெழுப்ப
கண்ணடித்த காளையவன்
காதலதைக் கண்டவள்
உள்ளூரக் களிப்புகொண்டே
நாணியே தலை குனிந்தாள்.
நாலைந்து நாளினிலே
நாற்றதுவும் வளரக் கண்டு
மகிழ்ந்தனர் இருவருமே.

சின்னாளில் கூடவே
களையதுவும் தான் வளரக்
கவனமாகக் கருத்தூன்றி
களையைப் பறித்தே தான்
ஏகினாள் அவளும் தானே.
புன்செய் பயிர் அதுவும்
பாங்காய்ப் பூப்பெய்த
பறவையினம் விரட்டிடவே
வைக்கோல் பொம்மையங்கே
வைத்தார்கள் காவலுக்கே.
பால்பிடித்து கதிர் வைக்க
பார்வையாய் முற்றிடவே
அரிவாள் தனை எடுத்து
ஆர்வமாய் அரிந்தனரே.
உழைத்த உழைப்பிற்கு
உற்சாக வரவேற்பு.
மும்மடங்கு லாபம் கண்டு
முனியப்பச் சாமிக்கே
முப்படையல் தானிட்டே
நன்றியதைச் செலுத்தியே
மகிழ்ந்தனரே இருவருமே.
உழுதுண்டு வாழ்வோரைத்
தொழுதுண்டு பின் சென்றிட வேண்டுமென்றே
ஆணையிட்டார், வள்ளுவரு.
உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்தே
வாழ்ந்திடுவோம்,நாளும் நாமே.



கவிஞர் செ.கலைவாணி,ஆஸ்திரேலியா

# பொறுத்திருங்கள்

எந்த மலையின்
கல்லென்றுத் தெரியவில்லை.
உளியின்
தாக்குதலுக்குப் பிறகு
வலியை மறத்து
கடவுளாய்ச் சிரிக்கிறது.

சிற்பியின்
சிந்தனைச் சிணுங்கலில்
சிதறிய சில்லுகளில்
கல் மோட்சம் பெற்றிருக்கிறது
கடவுள் சிலையாய்.



சிலையைச்செதுக்க
ஏதோவோர்
தெய்வத்திடம்
முறையிட்டிருக்க வேண்டும்
சிற்பி.

குருக்கள்
வேதங்கள் ஓத
வேள்விகள் நிகழ்த்த
குடமுழக்கும் நன்னீராட்டும்
முடிவுற்ற பின்னரே
பக்தர்களுக்கு
அருட்பாலிப்பு தொடரும்
இந்தத் தெய்வத்திடமிருந்து.

அதுவரையில்
பொறுத்திருங்கள்.
தெய்வத்திற்கு
இன்னும் கட்டளை
பிறப்பிக்கவில்லை
தெய்வம் தந்த மனிதர்கள்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# ஹைக்கூ

செய்நன்றியை மறக்கவில்லை,
வற்றிய சிற்றோடையிடம்
வேப்பமரத்து நிழல்.



கவிஞர் அ.செல்வராஜ்,உடுமலைப்பேட்டை

# ரகசிய அறை

நாட்குறிப்பில் இடம்
பெறாது!
பிறர் அறியாமல் ரகசியம்
காக்கும்!
மனதில் ஓடும்
எண்ணங்களை பொக்கிஷமாய்
சேர்த்து வைக்கும்!
இன்பமும் துன்பமும்
நினைவடுக்கில் நிறைந்து
காலம் கடந்த பின்னும்
அசை போடும்!
இத்தனையும் ஆழ்ந்திருக்கும்
என் மனம் என்னும்
ரகசிய அறை!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.119

# வலி – வழி

காலத்தில் சொல்ல முடியாத
வலி,வழி தந்தது யாரோ?

கனவிலும் கடமையிலும் களவு போக
பாதம் பதிக்கும் இடமெல்லாம் பள்ளமே.

கரம் நீட்ட யாரும் இல்லை காலம் முழுவதும்
வானுக்கும் மண்ணுக்கும் மாறுபட்ட பலர் துரோகத்தால்
உண்மை வெல்லுவது கடினம் ஏனோ ?
பலர் வாழ்க்கையில்

காலத்தில் கலங்கிய நீர் போல்
வழி தெரியாமல்.
பலர் உள்ளம் உலர்ந்து போனதே உலகத்தில்.

பொய்யைப் பிறப்பித்து போர்க்களமாக கூற்றில்
காயங்கள் காலம் காலமாக கடைசி வரை
எத்தனை எத்தனை வலிகள் துரோகிகளின் விழிகள்.



ஊமையானது வழியில்லாமல் வாழ்க்கை
பலர் செய்த காதல் கலங்கரையிலும்
குருதி நீரோடு மாளிகையும் மண்ணாய் போனதே.
நிரந்தரம் இல்லா நிலைப்பாட்டில் நீதிக்கும் பஞ்சம் வந்தது.

யார் யாரோ
காலத்தில் வலி,வழி தெரியாமல்.

கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# சொற்களில் ஒளிந்திருக்கும் மௌனம்



மேன்மை மாந்தரைக் கண்ட உடனே
மென்மையாய் இதழ்கள் விரிப்பதில் மௌனம்
நலமா? என்று உள்ளம் பேசும்
இதழ்கள் ஆங்கே மௌனம் காக்கும்
இதயம் கனத்த நேரங்களில் தாய்மொழி
பதமாய் வெளிவரத் தயக்கம் காட்டும்
வாய்வழி வார்த்தைகளின்றி மௌனம் காக்கும்
பெண்மலர் கண்மலரால் வார்த்தைகள் பேசும்
இதழ்கள் இவ்விடம் மௌனத்தால் பூக்கும்
நெஞ்சு பொறுக்காமல் அனல் வீசும்
நஞ்சாய் வார்த்தைகளை உதிர்க்க இயலாமல்
கொஞ்சமாய் சொல்லும் கஞ்சமாய் மௌனமும்
கலந்தே வந்து சூழலைக் காக்கும்
எதிர்ப்பைத் துணிந்து வெளிக்காட்டா நேரத்தில்
புதிராய் இதழில் மௌனமே வாழும்
சம்மதமும் காட்டும் எதிர்ப்பையும் நீட்டும்
சக்தி வாய்ந்த ஆயுதமே மௌனம்
பேசும் கருத்தின் வலிமையை விடவும்
மௌனம் ஆயிரம் செய்தியைக் கூறிடும்
பிடித்தவரின் மௌனம் நெஞ்சத்தை கூறிடும்

கவிஞர் குரு.ஜெயந்தி,சிதம்பரம்

# சிறுவர் புத்தகம் பேசுகிறது

வண்ண படத்துடன் புத்தகம் பேசுகிறது
புரட்டி புரட்டி பார்க்கிறாய்
எதை பார்க்கிறாய் படத்தையா? அல்லது கருத்தையா?
என்னுள் மயங்கி என்னை மூடாமல்
அறிவு களஞ்சியம் பெருகியது உனக்கு
நான் கண் தூங்காமல் விழித்துக் கொண்டே இருக்கிறேன்
சிறுவர்களுக்காக உங்கள் புன்னகை
மேலும் எனக்கு மேலும் தகவலை கொடுக்க வேண்டும் என்ற
எண்ணமும் ஏற்படுகிறது
புத்தகங்கள் எத்தனை எத்தனை படிக்க படிக்க
ஆர்வம் தூண்டுகிறது
படிப்பதால் தகவல் கிடைக்கிறது
மாய உலகில் வர்ண ஜாலம்
விசித்திரமான உருவங்களின் படங்கள்
பார்த்து கண்கள் ஆயிரம் கதை பேசும்
படிப்பதோடு மட்டுமல்லாமல்
புது புது கதைகளையும் பேச வைக்கிறது
சிறுவர்களை
சிறுவர் உலகம் மகிழ்ச்சியில் அழைத்துச் செல்ல
நூலகமும் மகிழ்கிறது
கற்கும் குழந்தையின் ஆர்வத்தை அதிகரிக்கவும் செய்கிறது
நாளுக்கு நாள் சிறுவர்
கதை கேட்பதோடு நின்று விடாமல்
மற்றவர்களையும் ஊக்கப்படுத்தி செல்கிறது
சிறுவர்கள் மன மகிழ்ச்சியோடு நாட்கள் நகர்ந்து செல்ல
நூலகம் வாழ்வில் இன்றியமையாத ஒன்றே



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# கண்கள்பட்டு கன்னம் தொட்டு

## கண்கள்பட்டு கன்னம் தொட்டு எங்கே சென்றாய்?



கண்களால் கொய்து
காவியம் எழுதினாய்
மண்ணில் புதுமைகள்
மனசுக்குள் செய்தாய்

எண்ணங்கள் யாவும்
எனக்குள் நீயானாய்
பண்பாட்டுச் சிலையாய்
பரவசம் தந்தாய்

கன்னல் மொழியே
கனிந்திடும் தமிழே
இன்னல் தந்து
இணையாது போனாயே

உடைத்தாய் மனதை
என்னுயிர் உறவே
கடையும் நினைவுகள்
கலங்கிட வைக்குதே

வாழத்தான் வார்த்தைதேட
வழிமாறிச் சென்றாயோ
பாழாய்ப் போனமனம்
பரிதவித்துக் கிடக்கிறதே

தேன்சொட்டும் மனதைத்
தேள் கொட்டியதாய்
கண்களில்பட்டு கன்னம்தொட்டு
எங்கே சென்றாய்

எங்கே என்று
என்னிதயம் தேடுவேன்
அங்கே என்னுயிரும்
ஆவியாய் அலையுதே

கவிஞர் கிருஷ் அபி,இலங்கை

# சிந்தை அறியும் ஓசை



இதழோரம்
இரகசியத்தின் தீண்டல்
அறியாமல் அறிந்து
அடக்கி குலுங்கியது

விழி சுற்றியது
அலசலிலே ஆசுவாசம்
கண்டவர் யாருமில்லை
கண்களின் கள்ளத்தனம்

மோனநிலையில்
முகம் பொத்திய
சிவப்பின் ராகம்
சிந்தை மறந்த சிதறாத
ஒசையில்

ரகசியங்கள் பல
புதையுண்ட யறையில்
வாசல்கள் திறப்பதும்
மூடலும்
முழுதும் உன்வசமாயின

சற்றே ஆழ்ந்து
நோக்கிடும் சாரல்
பார்வையிலே
குளிரெடுக்கும் நெஞ்சம்
குழைவின் ரகசியமே

உலவும் நினைவின்
உற்சாக உரசலின்
உறைவிடம்
உறக்கங்கள் துறந்து
உள்ளத்தின் ஒசைகள்

பதுக்கல் வழக்கில்
பிடிபடாமலே
பழகிக்கொள்ளுதே
உடன் வரும்
உடன்படிக்கையுடன்
இரகசியத்தின் ரகசியமே

மனக்கதவினோரம்
மறைந்திருக்குதே
ஆழ்கடல் அதிசயமே

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# அம்மா

சாயங்காலம் வந்துருச்சு சூரியனும் மறைஞ்சுருச்சு
எங்க வீட்டு சூரியனுக்கு(அம்மா) ஓய்வே கிடைக்கலை இன்னமும்
விடிகாலை எழுந்து வாசலைப் பெருக்கி நீர் தெளித்து கோலமும் போட்டு
வெகுவிரைவாய் குளித்து அடுக்களைக்குள் நுழைந்து
உள்ளதை சமைத்து உள்ளோருக்கு கொடுத்து
இல்லத்து வேலைகளை இனிமையாய் செய்து முடித்து விட்டு
சின்னப்பெண்போல சிட்டாகப் பறக்கிறார் கூலி வேலைக்கு
காலை முதல் மாலை வரை உடல் அலுக்க வேலை செய்து
கிடைத்த கூலியை பெற்றே விரைகிறார் வீட்டுக்கு.
வரும் வழியிலே அண்ணாச்சி கடையிலே
சாமான் வாங்கி தலை மேல் சுமந்தபடி
வேர்க்க விறுவிறுக்கத்தான் வேகமாய் போகிறார் வீட்டுக்கு
தன் அலுப்பு மறந்து வீட்டிலுள்ளோர் பசியறிந்து
உடன் சமைக்கத் தொடங்கிடுவார்
இரவு ஒருவேளை உணவுதனை
அனைவருடனும் இணைந்து உண்டு இன்பம் கொள்கிறார்
தாமதமாய் இரவினில் உறங்கி
அதிகாலை விழித்தெழுந்து நிதமும் ஓடுகிறார்
எங்கள் வீட்டு ஓய்வறியாச் சூரியனான என் அம்மா!



கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# பிண்டக்கூறு

இருக்கும் பொழுது இமைதிறந்து உடலினை கூறிட்டு
எத்தனை இச்சைகளை
கொட்டிவிட முடியுமே
அத்தனை கூறுகளை
அங்குல நகர்வில் துண்டித்துவிடும்
பொழுதினும்- பெண்
பிரித்த கூறுகளை
மாராப்பினால் சேர்த்தணைத்தபடியும்
புத்தகங்களை இறுக்கி அணைத்தபடியும்
ஆடாமலும் அசையாமலும்
நகர்த்தி நடைபோடுகிறாள்
இயற்கையில் பிரிக்கப்பட்ட
இதயத்திற்கு மேலே பதிக்கப்பட்ட
பிண்டக்கூறினை.
அவ்வப்போது கணமேறி
வெறுமைகளை மட்டுமே போர்த்தி
நகரவேண்டியதாகி உள்ளது
கருப்பை விட்டு வெளியேறி
பெண்ணெனும் பிண்டக்கூறுகளுக்கு!



கவிஞர் சே கார்கவி கார்த்திக்

# சிகரத்தை தொட்டிடு

வானத்து நிலவிலும்
வானவில் வரைந்திட
துயிலினை கலைத்து
தூரிகை எடுத்திடு

மேகமும் கண்சிமிட்டி
மேற்கில் விலகிட
விண்மீனையும் பிடித்திடு
வியக்கட்டும் கடல்மீனும்
கடலினில் விதைத்து
கரையினில் பறித்திட
அண்டை தேசமும்
அண்ணாந்து பார்த்திட
புயலென புறப்பட்டிடு
பூக்களும் மலருட்டும்

பனியில் குளிர்காய
பகலவனை வரச்சொல்லி
ஆகாயக் குடையினை
அழகாக விரித்திடு
வியந்திடும் உலகமும்
விந்தையென நினைக்கட்டும்

இயற்கையை ரசித்திட
இன்னும் தாமதமா
வானம்பாடியின் மேலமர்ந்து
வலம்வந்திடு திசையெங்கும்
கைக்குள் உலகமிருக்க
கையேந்தாமல் சிந்தித்திடு
தயங்காமல் முன்னோடு
தகுதியும் முன்னேறும்



சிதறாமல் பதறாமல்
சினமின்றி பயமின்றி
நுட்பங்கள் அறிந்து
நுழைத்திடு துறையெங்கும்
பிழையென்று புலம்பாமல்
பிறந்திடு அறிவியலாய்
அறிந்ததை தெரிந்ததை
ஆராய்ந்திடு தெளிந்திடும் மனமும்
ஓயாத முயற்சியால்
ஓங்கட்டும் உன்புகழ்
தடையென இருப்பதை
தயங்காமல் தகர்த்திடு

எவரெஸ்ட்டை தேடிடும்போது
ஏங்காதே ஓய்வுக்கு
சிறகினை விரித்து
சிந்தனையால் பறந்திடு

உயரத்தில் இருப்பவை
உனக்கு கீழேயிருக்கும்

மலையென இருந்தவையும்
மணல்திட்டென மாறிட
சிரமங்களின்றி விரைவில்
சிகரத்தை தொட்டிடலாம்.

கவிஞர் கோவை ஆனந்தன், கிணத்துக்கடவு

# பேரிடர் கால நினைவலைகள்

தனித்திருத்தல் காப்பு என கற்கபிக்கப்பட்ட காலம்
தனிமை மருந்தென்ற நிலை
கொடுந்துயரத்தை வெல்ல முடியவில்லை?
இரு திங்களாக திரவியம் இயற்ற வழியில்லை?
இரைப்பை இருப்பை நினைவூட்டியது.?
புறத்தில் கொடுந்தொற்று நின்றது!
அகத்தில் வறுமை சூழ்ந்தது!
வலியோடு பொழுதுகள் கடந்தன!
வையகம் வடக்கிருத்தல் நிலைக்கு சென்றது!
சாலையும் கூடமும் சலனமற்ற இருந்தது
தனிமை சிறைநாள்கள் நீட்டிப்பு




கவிஞர் செ.தமிழ்நேயன்,சென்னை

# துணிந்திடு பெண்ணே!

விந்தைகள் சூழ்ந்திருக்கும்
வியந்தகு உலகில் தேடப்படுகிறது
சாதனை துளிர்விடும்
பெண்கள் எனும் மந்திர கோலை

இம் மந்திர கோல்கள்
அகவிழி திறக்குமாயின்
மடமையில் மதி மயங்கும் உலகு
மதிநுட்பமாய் மறுபிறவி எடுக்கும்

அன்றைய பெண்கள் சாதனை தூண்கள்
இன்றைய பெண்கள் வீட்டின் கைதிகளாய்
உனக்கு முன் ஒரு கோட்டை
நீயே வரைந்து கொண்டு
அதை தாண்ட அச்சம் கொள்கிறாயே

அக்கோடு உன் வாழ்வை
பாதாளத்தில் சிறை பிடிக்கும்
என்பதை அறிவாயோ நீ

பாதாளம் ஓர் இருட்டறை
பவஞ்சம் ஒளி வீசும் தாரகை
பவஞ்சத்திற்கே ஒளி வழங்கும்
தீபமாய் நீயே மாறிட
துணிந்திடு பெண்ணே



கவிஞர் அகீலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் இலங்கை

# புரட்சியால் புதுமை நடத்து



படிக்காத காலம் மலை ஏறியாச்சி
படிக்கிற காலம் வந்து சூழ்ந்தாச்சி
படித்தவர்கள் மாறத்தான் இல்லை ஏனோ?
படிக்கத்தான் வைக்கவில்லை ஏனோ?

பெண்ணே உன்னை முடக்கும் கூட்டம்
பெண்ணிடமும் திறமையுள்ளதை மறந்த மேதைகளோ
பெண்ணுக்கு மட்டும்தான் ஒழுக்க விதிமுறைகளோ
பெண் வீரம் அறியா நிலமையோ?

கோழை என்று எண்ணி விட்டார்களோ
கோலம் போட மட்டுமென்று நினைக்கிறார்களோ
கோலமிட்ட கைக்கு தாலமிடவும் முடியுமென்று அறியாதோ?
கோட்டையை ஆளவும் முடியுமென்று அறியாதோ

ஏமாற்றி வைக்கலாம் என்று நினைக்கிறார்களோ
ஏமாற்றினால் ஏமாறும் ஏமாளியில்லையென்று அறியாதோ
ஏட்டுக் கல்வியை கற்கமுடியாதென்று எண்ணமோ
ஏழு பரம்பரையும் ஆக்குவபளென்று அறியாதோ

வீர மங்கையே புரட்சி செய்வாயோ
வீரப் பெண்ணாய் துணிந்தெழுவாயோ
வீணை செய்து புதுயுகம் படைப்பாயோ
வீணில்லை வீரம்மென்று எடுத்துக் காட்டுவியோ

கவிஞர் ஜஸ்ரா ஜலீல்

# பள்ளிக்கூடமே!

பழந்துணி உடுத்தி
பாதி வயிறு உண்டு,
பிழையில்லா வாழ்வுக்கும்
பீற்றிக்கொள்வோரோடு,
புத்தக நூல் சுமந்து,
பூவான மனதுடனும்
பைந்தமிழ் கற்றிடவே,
பொன்னான குழந்தையதும்,
போராடி வென்றிடவே,
பௌதீக வாழ்க்கையையும்
வாழ்ந்திடவே வளம் சேர்த்து,
பலம் சேர்க்கும்
பள்ளிக்கூடமே!




கவிஞர் நீலா சுபாஷ்,ஆக்கூர்

# இதுவும் காதலே

ஏனோ என்னையே
தொலைத்தது போல்
ஓர் உணர்வு
எண்ணில்!
காதல் தானோ என்று
கவி பாட முடியவில்லை!
அவன் செய்கை மொழிகளை
என்னால் எதிர்கொள்ள முடியவில்லை!
விட்டு விடவும் முடியவில்லை,
பேசாமல் இருக்கவும் தெரியவில்லை!
தொலைவில் நீ
தொலைக்க மனமில்லாத
நான்.
எந்த நிலையிலும்
தொடங்குவதும்
கனவிலும்
தொடர்வதும்
உனது
ஆ(கா)ட்சியே!




கவிஞர் ஜெனி கிரேஸி,மதுரை

# ஹைக்கூ கவிதைகள்

பறக்கும் தும்பி
தொடர்ந்து வருகிறது
குளிர்ந்த காற்று

காலையில் விழித்ததும்
முதலில் உரசிப் பார்க்கும்
அலைபேசியில் கைகள்

நாட்பட நாட்பட
முறுக்கேறிய படி
கிராமத்துப் பூவரசு

கடலலைகள்
பின்வாங்கி உள்ளே செல்லும்
காலடி மணல்

பச்சைக் காடு
அடர்ந்து காணப்படுகிறது
காலைப்பனி

மலை முகடுகள்
விண்ணை உரசுகின்றன
பனி மூட்டங்கள்

தூரத்தில் மலை
மங்கலாகத் தெரியும்
தவழும் மேகங்கள்

அடர்வனம்
கண்களுக்குப் பசுமையாக
பாசி படர்ந்த மலைகள்



மழை மேகங்கள்
வேகமாக அசையும்
ஊசித்தட்டான்கள்

மலையுச்சி
அசையாது ஓய்வெடுக்கும்
வெண்மேகங்கள்

அருவியாறு
குளிர்ச்சியாக இருக்கிறது
காலைக்குளியல்

நதி நீர்
அசைவின்றி அமைதியாக
அடியில் கூழாங்கற்கள்

மழை மேகங்கள்
படையெடுத்து வரும்
புற்றீசல்

அசையும் கிளை
சுற்றிச்சுற்றி வருகிறது
பூவை வண்டு

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# அசோகவனத்தில் சீதை

கடல் அலை வந்துபோவதைப் போல்
உன் நினைவோ என்னுள் வந்து போகிறது.

ராவணன் என்னும் கொடியவனால்
அடைப்பட்ட மான் போல தவிக்கிறது
என் மனம்!

பூக்கள் தேசத்தின் இளவரசி நானோ!
இன்று கயவர்களின் பிடியில் சிக்கிக்கொண்டேன்,
என் மன்னனின் வருகையை
எதிர்பார்த்து கிடைக்கிறது என் கண்கள்.



கனவோடு இருக்கிறாள் மன்னனைக் காண,
அனுமனும் வருகிறான் சீதையைக் காண,
ராவணனோ துடிக்கிறான் மணந்துகொள்ள ,
சீதையோ வாடிகிறாள் அசோக வனத்திலே.

சிற்பிக்குள் மாட்டிய முத்து போல
ராவணனின் எல்லையில் மாட்டிக்கொண்டாள்.
அனுமனோ அங்கு வந்து சேர
ராவணனின் சூழ்ச்சி என்று சீதை என்ன,
அனுமனை அவளோ நம்பவில்லை.

ராமனின் மோதிரத்தை அனுமன் கொடுக்க
புன்னகையில் மலர்ந்த மலர்போல
அதனை வாங்கிக் கொண்டாள்,
கணயாழியை எடுத்துக் கொடுத்து
என் மன்னனுக்காக காத்திருக்கிறேன் என்றாள்.

கவிஞர் பூஜாராஜ்குமார்

# அவனின் அவள்

திங்களுக்கு திங்கள் பூத்திடும்
பெண்மையைத் தாங்கிடும் கரம் கொண்ட
ஆண்மையே!

குருதி ஓடும் காலிடையே
இடை தாங்கும் பாரம்
வலி உணர்ந்தான் அவன் விழியிலே.

திரவக்குழந்தை பெற்றெடுத்தாள்
புணரியாய் அடிவயிற்றைப் பெற்றவள்.
பொழிந்தான் திவலையாய் அன்பை.

அக்கறையில் அணிந்த ஆர்ப்போடு
அழகாய் இரசித்தான் அவனின் அவளை.
அவன் கவனிப்பில் மறந்தாள் உதிரச்சிதறலை.



கொண்டலாய் விழி பெற்றாள்
சில கண அவனின் தோள் சாய
பொய்மையின் உச்சத்திலும்.

அகத்தின் ஆசையின் படியே
இடையின் பாரத்தை இறக்கிய
பிடியை கொடுத்தான் ஆறுதலான உணர்வை.

கணத்திற்க்கு கணமதிலே
உன்னவன் நானடி என்பதை உணர்த்தினான்
அவளுக்கென உசிதம் பெற்றவனாய்.

மாதவிடாயும் மறைய ஐந்தினமாகிட.

தாயானான் தலைவன் தலைக்கோதும்
மென் காற்றாய்.

அவள் பேச்சில் திழைத்த அவன் நகையை
உணர்ந்து நாணியே அவனி பதித்தாள்
அவள் விழியையும்.

செல்ல சண்டைகளில் ஸ்நேகம் உணர
உச்சத்தின் கோபமும் கண்டதில்லை.
ஆனந்தத்தின் எல்லையும் இங்கில்லை.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# சுவடுகள்

வெற்றிகளில் மிளிர்ந்தாலும்
தோல்விகளில் தவழ்ந்தாலும்

வாழ்க்கை போரினிலே
வாழ்வியலும் சுவடுகளே

ஓடும் சக்கரமாய்
மாறிமாறி சுழன்றாலும்

ஆரங்களின் அச்சாணியாய்
ஆர்ப்பரிக்கும் சுவடுகளே.



கவிஞர் ஏ.தேவராஜ்,சென்னை

# வெப்பம்



பங்குனி வெயில்
பற்களைக் காட்டி
பாடாய்ப்படுத்துகிறது
சித்திரை வெயிலோ
சித்திரவதை செய்ய
சித்தமாயிருக்கிறது
ஆண்டு தோறும் வெப்பம்
அதிகரிக்க அதிகரிக்க
அவஸ்தைக்கு குறைவில்லை
கருணையில்லாக் கதிரவன்
காட்டுத்தனமாக சுட்டெரித்து
குழலிட்டு சக்தியை உறிகிறான்
"பத்துமணி முதல் மூன்றுமணி வரை
வெளியில் செல்லாதீர்"
அரசாங்க அறிவிப்பு
அன்றாடங்காய்ச்சியின்
ஆகாரத்திற்கென்ன வழி?
தவணை முறையாகவும்
தள்ளுபடி விலையாகவும்
கூவி விற்கின்றனர்
குளிரூட்டும் சாதனத்தை
பல வண்ணங்களில்
பல வடிவங்களில்
பனிக்கூழ் விற்பனை
இளநீரும் நுங்கும்
இந்த வருடம் உள்ளது
அடுத்தவருடம் கிடைக்குமா?
அறியமுடியவில்லை

இயந்திரம் நாடும் மானிடா
இயற்கைக் குளிரூட்டியான
மரங்களை மறந்தாயே
ஐம்பதாயிரம் இயந்திரம்
ஐம்பதே ரூபாய் வேப்பமரம்
ஐந்தறிவுப் பறவையும்
தின்றபழத்தின் விதையை
மரமாக்கிட நினைக்கையில்
ஆறறிவு மனிதப் பதரே
மரத்தை வெட்டுவதேனோ?
தன்னை வெட்டுபவனுக்கும்
நிழல் தருவதை அழித்துவிட்டு
வெப்பமென அலறுவதேனோ?
இயந்திர செயற்கை விடுத்து
இயற்கை மரம் நடாவிடின்
இப்புவி கருகுவது
இன்னும் சிலநாட்களிலே
இயற்கையன்னையின் எச்சரிக்கை.

கவிஞர் ஷீலாதேவிஅருணாசலம்,நாகர்கோவில்

# அவா அறுத்தல்

அதிகாரம் : 37




எவ்வுயிர்க்கும் எக்காலமும்
மறுபிறவியெனும் துன்பந்தரும்.
வித்து அதனையே
அவா(ஆசை) என்பராம்.

ஒருவனுக்கு விருப்பென்றால்
மறுபிறவாமையே வேண்டும்.
அவாவற்ற நிலைவிரும்பிடின்
அந்நிலை உண்டாகும்.

அவாவற்ற தன்மையான
அருமைச்செல்வம் வேறில்லை.
எவ்விடத்தும் இணைச்செல்வம்
வேறொன்றும் இல்லையாம்.

ஆசையில்லா நிலையே
தூய்மையின் நிலை.
வாய்மை விரும்பிடின்
அந்நிலை தானேவந்தடையும்.

பற்றற்றோர் எனப்படுபவர்
அவாவற்ற நிலையினரே.
மற்றெல்லாரும் இவ்வுலகின்
பற்றறுக்கா நிலையினோரே.

ஒருவனின் தளர்ச்சிகண்டு
வஞ்சித்தல் அவாவாகும்.
வஞ்சனைக்கு ஒதுங்கலே
மேன்மையான அறநெறியாம்.

ஆசையை அறுத்துவிட்டால்
கெடாமல் வாழலாம்.
கேடற்ற நற்செயல்கள்
தேடிவந்து வாய்க்கும்.

ஆசை இல்லையாகில்
அழிவு இல்லையாம்.
ஆசைகொள்ள துன்பங்கள்
மேன்மேலும் பெருகிவரும்.

கொடுந்துன்பமாம் அவா
வாழ்வில் கூடுமாயின்.
இடையறாதத் தீவினைகள்
வாய்த்துக்கொண்டே இருக்கும்.

ஒருபோதும் நிரம்பிடாத
அவாவென்னும் பானையை.
அடித்து நொறுக்கிட்டால்
அந்நிலையே நல்வாழ்வுதரும்!

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# கலையாதே கனவே

காலங்கள் கடந்து
கிடைக்கும் அன்பில்
கலங்காது இரு மனமே!

காலங்கள் மாறும்
காட்சிகள் மாறும்
மனம் கொண்ட பாசம்
மறைந்து போகுமோ !

எந்த உறவாக இருந்தால்
என்ன!
ஏற்றுக்கொள்ள தயக்கம்
என்ன!
இதுவும் கடந்து போகும்
என்று!
இயல்பாக இரு மனமே!



வாரத்தைகள் எல்லாம் வாழ்க்கை அல்ல!
வாழும் நாமும் கடவுளும் அல்ல!
வாழ்க்கை என்பது ஒருமுறை!
வாழ்ந்து தான் பார்ப்போமே இறுதிவரை!

இணைந்த கைகள்
என்றும் பிரியாமல்
இருக்கட்டும்!
இறந்த காலங்கள்
மறைந்த மேகங்களாய்
காணாமல் போகட்டும்!


நாளை விடியலும் நமதே ஆகட்டும்!
நாட்களும் அதன் போக்கில் நகரட்டும் !
நம்பிக்கை என்ற ஒன்றை கொண்டு!
நடைப்போடு !
நாம் என்ற மனதோடு!

கவிஞர் சாரா ஜகன்,சென்னை

# நல்லெண்ணங்கள்

உருவமில்லா உள்ளம் எனும்
எண்ணங்களில் நல் நினைவு
துளிர்விட்டால் இன்பமுடன்
வாழ்வு வளமாகும் நலமாகும்

வஞ்சம் மனதில் தஞ்சமாகாமல்
நெஞ்சம் அது செயல்பட்டால்
மனித உறவில் ஏற்றம் வரும்
உயர்வெனும் மாற்றம் வரும்



நட்புக்கு தோள் கொடு
உறவுக்கு கை கொடு
உரிமைக்கு குரல் கொடு
வெற்றிக்கு விருந்திடு

சமூக சேவை சிந்தனை
முன்னேற முதல் நினைவு
கனவையும் நனவாக்க
சாதனையை அள்ளித் தரும்

கவிஞர் ஞா.போனிபாஸ்,கடலூர்

# விவசாயி

வெட்ட வெயிலில் ஏர் உழுது,
வியர்வையை விதையாய் விதைத்து,
சேற்றை உடையாக்கி
கண்ணீரை உரமாக்கி
மழைக்காக காத்திருந்து
சில பயிர் வாடிப்போக
உயிர் பெற்ற பயிரைபாதுகாத்து
அறுவடை செய்து உலகத்துக்கு
உணவூட்டும் விவசாயி.



கவிஞர் பூஜா ராஜ்குமார்

அகர முதல இலக்கிய பேரவை
அகரமும் தமிழே!
முதலும் தமிழே!!

# அடியேனும் தசாவதாரமும்




பெருமாள் மட்டுந்தான் தசாவதார மூர்த்தியா?
அருமை மனிதன் அடியேனுந்தான் தசாவதாரமூர்த்தி!
எப்படியென்று உமக்குக்கேட்கத் தோன்றவில்லை யென்றாலும்
இப்படித்தான் என்றுரைக்கத் தோன்றுகிறது அடியேனுக்கதை
இங்கிதம் கருதியேனும் கேட்பீர்கள் தானே!

நல்லதொரு இணையருக்கு தலைமகனெனவொரு அவதாரம்;
அல்ல் தீர்க்கும் அண்ணனாகவொரு அவதாரம்;
தங்கை பிள்ளைகளுக்குத் தாய்மாமனாய்வொரு அவதாரம்;
நங்கையவளுக்கு மணாளனாய் நானெடுத்தேனொரு அவதாரம்;
நலமாக அவளீன்ற புதல்வனுக்குத்தந் தையவதாரம்;
தம்பியின் பிள்ளைகளுக்குப் பெரியப்பனாயொரு அவதாரம்;
எம்மைநம்பி பெண்கொடுத்தார்க்கு மருமகனவ தாரம்;
என்னருமை மாணவர்க்கு தமிழாசனாயொரு அவதாரம்;
என்னுயிரினும் மேலானவிந்தி யாவிற்கொரு குடிமகனவதாரம்;
என்னருமை தமிழக்குக் கடைமகனாயொரு அவதாரம்;
இவ்விதமாய் நானுமெடுத்தேன் இப்பிறப்பில் தசாவதாரம்;
இருப்பினுமெனுக்கு நற்பெயரை எவ்வதாரமும் தரவில்லையே!

நற்பெயரை ஒன்றில் ஈட்ட முற்பட்டால்
ஏற்கவியலா அவப்பெயரை வேறொன்று தருகிறது;
நல்லமகனில்லை; நல்லவண்ணனில்லை: நல்துணைவனில்லை; நல்மாமனில்லை;
நல்மருமகன், நல்லாசான்,நல்லகுடிமகன், நல்மாணவன்
நல்லபெரியப்பன் நானில்லையென நானிலத்தோர் உரைத்தாலும்
பெரிதும் கலங்கா என்சிறுமனம் என்பிள்ளையெனைப்
பார்த்து நல்லப்பன் நீயில்லை யெனவுரைக்கும் வேளைகளில்
பரிதவித்து பாலையாகிப் போகிறதே, என்செய்வேன்நான்!

இராமனாய் நீயிருயெனயென் மகனிடமொருநாள் நானுரைத்தவேளை
இளம்பிள்ளையவன் தசரதனாய்நீ முதலிலிருவென உரைத்தவனிடம்
தசரதனாய் நானிருந்து பிள்ளைப்பாசத் தாலுயிர்விடேன்;
தன்னுயிர் ஈந்துதன்மகன் ஹூமாயூனைக் காத்த
பாபராய்த்தான்நான் இருப்பேனென இக்கவிவழி பதிலுரைப்பேனே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

# பறக்க முயற்சி

நான் உதித்த அதே இடத்தில் எனக்கு பின் உதித்தவளே !
இன்று என் கால குறிப்பில்
உனக்காக நிமிடங்கள் ஒதுக்கப்பட்டு இருக்கும்.
பம்பரமாய் சுற்றிய உன் வாழ்க்கை சக்கரம்
சுண்டி இழுக்கப்பட்டுவிட்டது.
உன்னிடத்தில் நான் இருந்திருக்கலாம்
உன்னை காண ஏங்கும் நாட்கள் பல
உனக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நிமிடங்களும் பல
நீ புதைந்திருக்கும் புண்ணிய பூமியை
தினம் முத்தமிடுவேன் கற்பனையில்.
என் ஆதங்கத்தை எல்லாம்
உன் காதுக்குள் கிசுகிசுப்பதாய் நினைத்து
மண்ணுக்குள் புதைப்பேன்!
'பார்ப்போருக்கு நான் பைத்தியம்!'
உனக்கும் எனக்குமான பிரிவு
இன்னொருத்திக்கிடையிலான தொடர்பை வலுவாக்கி விட்டது.
அதுவும் பிரிவுக்குப் பயந்துதான்!
ஆனால் இப்பொழுது நினைக்க மட்டுமே முடியும்.
நான் ஒரு தொலைவில் முடக்கப்பட்டவள்!
வாழ்க்கை கற்றுத் தந்த அனுபவங்கள்
என் சிறகுகளை உடைத்து விட்டது.
இன்னும் முளைக்கும் வரை காத்துக் கொண்டிருக்கிறேன்.
பறக்க முயற்சி செய்து கொண்டு!



கவிஞர் ஹம்னா அக்பர்,இலங்கை

# பெரிய வியாதின்

(சிறப்புக் கவிதை )

காலகளைக் கழுவிக்
கொண்டிருக்கும் போது
கழுத்தை அறுக்கத்
திட்டம் தீட்டுகிறார்கள்

இரவு உணவருந்திக்
கொண்டிருக்கும்போது
தலையெடுக்க
நினைக்கிறார்கள்

முப்பதுக் காசுகள்
கைமாறும் போது
காட்சிகளும்
மாறுகிறது

முத்தத்தாலும்
காட்டிக்
கொடுக்க முடியுமென
நிருபிக்கிறார்கள்

கூடவே இருப்பான்
சண்டாளன் என்பது
கூட்டம் முடியும் போது
தெரிகிறது

வளர்த்தக் கிடா
மார்பில் பாய்கிறது



கையால் ரசம்
வாங்கிக்
குடித்தவரெல்லாம்
உயிர் குடிக்க
நினைக்கிறார்கள்

பணத்தை
சுமத்தவரெல்லாம்
பாசத்தை
சுமக்கவில்லை
என்பது
எல்லாம்
முடிந்தத பின்பே
புரிகிறது

கவிஞர் இரா.மதிராஜ்,காங்கேயம்

# மௌனப் போராட்டம்

போராட்டமே வாழ்க்கையாய்.
எத்துனை எத்துனை போராட்டங்கள்!

ஆயின் எம் போராட்டம்
உப்பும் தின்றிட்டு
தண்ணீரும் குடிக்க முடியாமல்.




அவர்களுக்கு ஒரு பக்கமும்.
எங்களுக்கு எல்லாப் பக்கமும்
இடிதாங்கிகளாய்.

30% கூடஅல்ல 90% கூட
கொடுக்கிறோம்.
ஆனாலும் ஆலையிடை
செங்கரும்பாய் ஆகிறோம் நாளும்.

விட்டுக் கொடுத்தலும்
விட்டுத் தொலைத்தலுமே.
வாழ்க்கையாய்

பிறந்த வீட்டாரெனில்
தங்கத் தாம்பாளம்.
புகுந்த வீட்டாரெனில்
தகரம் கூடவேண்டாம்.
தகாத வார்த்தைகளால்
தாளித்தல் எவ்வகை நியாயம்?

விருப்புகள் விடுத்து
பொறுப்புகளுக்காய்
பதில்களை வைத்துக்கொண்டு
கேள்விகளைத் தேடுகிறோம்.

மாமியாரும் பெண்ணே
மருமகளும் பெண்ணே.
மகன்கள் மட்டும்
மண்ணாய்.
மௌனமாய் போராடுகிறோம்.
வீடும் நாடும் காக்க!

கவிஞர் ராஜு ஆரோக்கியசாமி,திருச்சி

# அகமே அழகு

இதயராணியே
உன் தரிசனம்
பெறாமல்
நட்சத்திரங்கள் மினுக்க
மறுக்க.

குயில்கள் கீதமிசைக்க
மறக்க.

வானவில் தோன்ற
தயங்க.

காற்றின் மொழி
ஊமையாக.

இப்புவி இயக்கம்
துறக்க.

உனைக்காணாது
மரணித்த புவியில்
நான் மட்டும்
வாழ்கிறேனடி.



நான்
உன்னகத்தைப்
பார்க்கிறேன்

இவை
உன் முகத்தைப்
பார்க்கிறது.

கருணை புரிந்து
தரிசனம் தா

பாவம் புவி
பொழைத்து விட்டு
போகட்டும்.

கவிஞர் மு.அமானுல்லாஹ் பாகவி,செங்குன்றம்

# பெயரற்றவள்

எண்ணங்களுக்கு வண்ணமானாள்
வார்த்தைகளுக்கு இனிமை சேர்ந்தவள்.
கனவுகளுக்கு காரணமானவள்
தனிமைக்கு துணையானவள்
நிதர்சனத்தில் கை சேரா
காற்றானவள்
நினைவுகளில் மட்டுமே
நீக்கமற நிறைந்திருப்பவள்.



கவிஞர் சாந்தி,காங்கயம்

# அமிழ்தென்ற அழகே

தீராயின்பந் தரும் தீந்தமிழ்
திகட்டாசுவை கொண்ட தேன்தமிழ்
அமிழ்தென்ற அருந் தமிழ்
அழகென்ற செந்தமிழ்
நாடு போற்றும் நற்றமிழ்
பாடி சிறகடிக்கும் பைந்தமிழ்
சுவை கொண்ட சொற்றமிழில்
வழக்கொழியும் சொற்கள் ஏராளம்
சோறு என்றே கூறிட்டால்
குறைந்தா போகும் சுவை
வட்டில் மருவி தட்டானது
தட்டும் இப்போது தடுமாறுது
உறவுகளை யழைக்கும் முறைமை
வார்த்தைகள் ஒற்றையாய் ஆனது
தழைக்கும் தமிழின்
அழகு வார்த்தைகள் மறைவாய் ஆனது
அன்னைத்தமிழ்தான் அழகுமொழிதான்
உச்சரிப்பில் உயிர் வளர்க்கும் உன்னதம் தான்
அமிழ்தென்பது தமிழே
தமிழென்பது அமிழ்தே
சீரிளமைத்தமிழை சிந்தையில் ஏற்றுவோம்
பேரின்பக்கடலை பேருலகில் நிறுத்துவோம்




கவிஞர் அகிலா ஜெயராமன்,செந்துறை

# கவி மலர்கள்

கவிதைகள் பிறந்து
கருத்தினை நிறைக்கட்டும்

உள்ளத்து வேதனைகள்
உடைந்து சிதறட்டும்

நாளும் பொழுதும்
நலமாய் அமையட்டும்

நெஞ்சத்து மஞ்சத்தில்
கற்பனைகள் உதிக்கட்டும்

எதுகையும் மோனையும்
இதமாய்க் கொட்டட்டும்

வானமும் பூமியும்
வர்ணம் புரியட்டும்




சூரியனும் சந்திரனும்
முத்துக் குளிக்கட்டும்

இயற்கைக் காட்சிகள்
வரிகளில் மின்னட்டும்

பறக்கும் பறவைகள்
பன்னிசை பாடட்டும்

மணம்வீசும் மலர்கள்
உலகெங்கும் பூக்கட்டும்

கவலைகள் தொலைந்து
காலத்தைக் கழிப்போம்

கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர்,கம்பளை

# புத்தனும் வறுமையும்

போக்கிடம் துறந்த புத்தனின் பாதையில்
பிச்சைக்காரனும் பேராசைக்காரனும் வழிமறிக்க
உலகத்தில் போக்கில் சுயநலம் நிறைந்து
காணும் அனைத்தும் தனதொன்றாக்க
வளரும் பேராசையின் வயிற்றுப் பாட்டிலும்
யாசகம் கேட்டு நீளும் கரங்களில்
வசவுகள் பெருகி தட்டில் நிறைவதை
வருத்தமுடன் விளம்ப
துன்பத்தின் வேர்களைத் துடைத்திட
பாதைகள் தேடிய புத்தனுக்குள்ளும்
மனதின் சஞ்சலம் எட்டிப் பார்க்கிறது
பேராசையின் கனவுகளுக்குள் புகுந்தாலும்
பிச்சைக்காரனின் மனதினில் நுழைந்தாலும்
துரத்தும் ஆசைகளைத் தீண்ட முடியாமல்
போதி மரத்தைத் தேடும் புத்தனை விட
உலகின் போக்கில்
ஒப்புயர்வுடன் வாழும்
வறுமையின் வாழ்க்கை மேலெனலாம்.



கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

# பகைவர்க்கும் அருள்வாய் நன்னெஞ்சே

அருள் சுரக்கும் முதலிடம் நீயன்றோ
அண்டம் படைத்திட்ட இறைவன் தானன்றோ

ஐவிரலும் கையொன்றில் வடிவம் வேறே
ஐம்பூதத் தன்மைகளும் வேறு வேறே

ஆறுண்டு சுவையும் நாவிற்கு வேறே
அகம் கொண்ட குணங்களும் அவ்வாறே

உலகம் என்பது நாடக மேடை
கலகம் நிறைந்த வாடகை வீடே

இரவொன்று இருந்தால் பகலொன்று வருமே
இனியாருக்கு அங்கே இன்னாரும் உளரே



அன்பு அருவியாய் ஊற்றெடுக்கும் உள்ளம்
வன்பைத் தருதே மற்றொரு பக்கம்

இறுதியில் வெல்வது அன்பும் அறமுமே
இதுவே நாடகத்தில் இறையின் தீர்ப்புமே

அகிலம் பெற்றிடும் நல்ல பாடமே
அறிவும் பற்றிடும் வல்ல இடமே

இறைவா அளப்பாய் உயிர்களுக்குத் தினக்கஞ்சே
இதுபோல் அருள்வாய் பகைவர்க்கும் நன்னெஞ்சே

கவிஞர் பஸ்லா பர்ஸான்,காத்தான்குடி(இலங்கை)

# கோடையின் தாக்கம்

ஞாயிறின் ஆதிக்கத்தை
கண்டு அலறிஓடின
சின்னஞ் சிறு
பறவைக் கூட்டம்
தற்கொலையும் செய்துக்கொண்டன
அவற்றுள் பல கூட்டம்
சூட்டாலும் தாகத்தாலும்
இவற்றை கண்டு தானும்
சோர்வடைந்து விட்டான்
மாலை வேளையில்
சிறுகொடிகளும் சிறுசெடிகளும்
பெருமூச்சு விட்டன
தென்றல் வீச தொடங்கியதில்
விலங்குகளோ களைப்பில்
இருந்து மீண்டன
கிழவனும் கிழவியும்
தென்றலை பருக
வீதியில் அமர்ந்தனர்
நிலவின் எழுச்சியில்
குளிர்ந்தன யாவும்
அகமும் புறமும்
மீண்டும் ஓர் ஏக்கம்
கோடை மழை
பொழியதா என்று
தரணியும் காத்து நிற்கிறது
மானுடனை போலவே



கவிஞர் பேரா.முனைவர்.அக. வீரவன்சாரா,சிதம்பரம்

# மொழிகள்

உலகில் உள்ள உயிர்கள் பல கோடிகள்,
மனிதனை தவிர, ஏனைய உயிர்களுக்கு
பரிபாஷைகள் உள்ளன என்கின்றனர் ஆய்வாளர்கள்
ஏன் தாவரங்களுக்கு கூட நாம் சொல்லும்
வாழ்த்து சொற்களால் பட்டுப் போன
மரமும் கூட துளிர் விட்டிருக்கிறது.
தெருவில் வித்தை காட்டுகின்றவனும்,
சர்க்கஸில் பழக்கி, வித்தைகளை பழக்கியும்
நம்மை மகிழ்விக்கும் விலங்குகள் கூட
நாம் பேசும் மொழிகளை கூர்ந்து கவனித்து
செயலாற்றுகின்றனவே! நம் சொற்களை,
புரிந்து வீடுகளில் வளர்க்கும் செல்லப் பிராணிகள்
பசு, நாய், பூனை, கிளி போன்ற உயிர்கள்
நமக்கு பல விதங்களில் நன்மையும்
உதவியும் புரிகின்றனவே!
நம் வீட்டு குழந்தைகள் பேசும் மழலையின்
மொழி அற்புதமே! இதனால் தான் நம்
வள்ளுவ பெருந்தகை திருக்குறளில்
குழல் இனிது யாழ் இனிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்.
மழலையின் மொழியும் ஒரு மொழியே!
உலக நாடுகளின் மொழிகள் 7100 என்கின்றனர்.
இந்திய மொழிகளின் எண்ணிக்கை மட்டும் 398 ஆகும்.
பாரதியாரின் மொழி ஆர்வத்தால் கற்ற மொழிகள் மட்டும்
முப்பதுக்கும் மேல் என்கின்றனர். எம்மொழி கற்கின்
"நம் தமிழ் மொழி போல் இனிதானது எங்கும்
காணோம்" என்றார். நம் பாட்டுக்கொரு புலவன் பாரதி,
எம்மொழி எங்கும் இருக்கட்டும், ஆனால் நம் தாய் மொழி
தமிழ் மொழியே, ஆதிகால கல் தோன்றி மண் தோன்றா
காலத்து முன் தோன்றிய மூத்த மொழி. கன்னித் தமிழ்
பைந்தமிழ், வண்ணத் தமிழ், செந்தமிழ், தமிழ் மொழியை
வாழ்த்த வாழ்த்த நம் நெஞ்சும், தலையும் நிமிர்ந்து நிற்கட்டும்.

கவிஞர் கிருஷ்ணவேணி.ஆ,ஊத்தங்கரை

# மலைஞாலம் (கேரளா)

இந்தியத்தின் தென்திசையில் மாநிலங்களில் ஒன்றதுவே!
கீழ்திக்கில் தமிழ்நாடு வடக்கினிலே கர்நாடகம்
மேற்கினிலே அரபிக்கடல் எல்லைகளே! வழங்குமொழி
மலையாளம்! அமைந்ததுவோ பத்தொன்பது நூற்றினது
ஐம்பத்து ஆறாகும்! நகரங்கள் ஐந்தமைந்த
மாவட்டம் ஈரேழும் கொண்டதுவே! தலைநகரோ
திருவனந்த புரமாகும்! வேர்ச்சொல்லோ சேரளமென
சேரநாடு என்பதாகும்! அசோகர்தம் கல்வெட்டில்
கேரளமெனக் குறிப்புண்டே! மேற்கமைந்த மலைத்தொடர்க்கும்
மேலைதிகழ் அரபிக்கடல் இடைநிலமே ஈதாகும்!
வாழ்மக்கள் மலையாளிகள் என்போமே! பரசுராமர்
கோடரியால் கடல்பிளக்க தோன்றிட்ட நிலப்பகுதி
என்றுரைக்கும் புராணக்கதை! ஸமஸ்தானம் மூன்றினையே
ஒன்றாக்கித் தோன்றியதாம் மாநிலமே! ஆசியாவில்
முதன்முதலில் உருவான கம்யூனிஸ்ட் மாநிலமே!
வட்டங்கள் அறுபத்து மூன்றோடு மக்களவைத்
தொகுதிகள் இருபத்தும் சட்டமன்றத் தொகுதிகள்
ஒருநூற்று நால்பத்தும் கொண்டதுவே! மிகுதியாக
இந்துக்கள் மற்றும்பின் இசுலாமியர் கிறித்துவரும்
மிகக்குறைவாய் சீக்கியர்கள் சமணர்கள் பௌத்தருமே
வாழ்கின்றார்! இந்தியாவில் கற்றோர்கள் மிக்கமாநிலச்
சீர்த்தியது! மக்கள்தொகை முப்பத்தைந் துகோடிகளே!
மலையாளம் மட்டுமின்றி தமிழ்கன்னடம் உருதுகொங்கணி
மக்களுளர்! கதகளியுடன் ஐந்துநடனம் சிறந்தயிடம்!
மேளசெண்டை மாண்புடைத்து! ஓணம்விஷு பண்டிகைகள்!
தென்னைபலா மிக்குண்டு! சுற்றுலாவின் தலங்கள்பல!
இயற்கைதன் எழிலார்ந்த தேநிலவைக் கொண்டாட
சூழலெழில் அமைந்ததுவே சென்றுகண்டு துய்ப்போமே!

கவிஞர் கணக்காயன் (இ சே இராமன்)

அகர முதல இலக்கிய பேரவை

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே! முகமும் தமிழே!!

# பூவுக்குள் பூவை

விடியல்கள் ஒவ்வொன்றும்
விநோதம் தானன்றோ - அவை
பூவினங்கள் மாறும்
பருவங்கள் போன்றன்றோ - நம்
பூவையர் பருவம் போலன்றோ.

மலரோடு தொடரும்
அலரைத்தானே அனைவர்
மனமும் மணந்து
மகிழ விரும்பும் மெய்யன்றோ! - நம்
மாதர் வாழ்வின் படிகளன்றோ.

மலரத் துடித்து தலைநிமிர்ந்து
"அரும்பாய்க்" குவியும் நிலையது
மலரின் முதல்நிலையன்றோ - அது
பெண்ணின் பருவம்
பேதையெனும் நிலையன்றோ.



குவிந்த அரும்பு வீங்கிச்
சற்றே பெரிதானால் நாம்
காணும் எழில்தான்
பெதும்பை போன்றன்றோ - அது
"மொக்கு" எனும் நிலையன்றோ.

நாளிரண்டு கடந்தால்
நறுமுகையென நீண்டு
முகிழ்க்கும் நிலைதான்
மங்கையர் பருவமன்றோ - இந்நிலை
"மொட்டு எனப்பெயரன்றோ!

பூவிதழ் விரிந்து நம்
பூவையரைக்கவரும்
நான்காம் நிலை தான்
நம் மடந்தைப் பருவமன்றோ.
நறுமண "மலர்"அன்றோ!

அதனைத்தொடரும்
அழகிய பூவின்
ஐந்தாம் பருவம் - நம்
அரிவையரின் தொடர்
தெரிவையரின் அழகன்றோ! - அது
"அலர்"எனும் அழகன்றோ!

வாடிவதங்கி
வாழ்ந்தது போதும்
பேரிளம்பெண் நிலை தாண்டி
வீழும் நிலைவரின் - அது
"வீ"யெனும் நிலையன்றோ - அது
தெரிவை தாண்டிய நிலைன்றோ!

விடியலின் மாற்றம்
வீயின் தொடர்ச்சி
இறுதிப்பரிணாமம் - நம்
முதுமையின் உச்சம் - அது
"செம்மல்"நிலை தானன்றோ!

விடியல்கள் ஒவ்வொன்றும்
விநோதம் தானன்றோ!
பூவினங்களின்
பருவங்கள் போன்றன்றோ! - நம்
பாவையர் பருவமும் அதுவன்றோ!

கவிஞர் செண்பகச் சோலையாள்,ஆய்ஷ்

# அகவாத புறாக்கள்

அரைக்காணி நிலத்த வச்சி அயல்நாடு போகத்தான் ஒரு கருத்தா முடிவாச்சு
முதல் பயணத்தில் மூத்த மகளுக்கு கல்யாணம் செய்தாகணும்
இரண்டாவது பயணத்தில் அடகு வச்ச பத்திரத்தை மீட்டாகணும்
மூன்றாவது பயணத்தில் ஒத்த ஆம்பள பிள்ளைக்கு வீடு கட்டி வைக்கணும்
எப்படியோ கஷ்டப்பட்டு அக்கா மகனுக்கு மூத்த பொண்ணு கட்டி கொடுத்தாச்சு
பத்து சதுரத்துல பாதி வீடு கட்டி ஒட்டாம பாதியிலேயே நிக்குது
அடகு வச்ச பத்திரமோ வட்டி சேர்ந்து இரண்டு அசலா நிக்குது
சித்தப்பாரு செத்ததை வாட்ஸ்ஆப்பல பாத்து தான் கண்ணு கலங்கி நிக்குது
பொண்டாட்டிக்கு தாலிக்கொடி எடுக்கணும்னு பேரப்புள்ள பொறந்து சிரிக்குது
நாலு முறை பயணம் போயும் பத்திரமும் திரும்ப மீண்டும் கட்டி முடிக்கல
விதி சுமையா இல்ல குலதெய்வம் சாபமா தெரியல
மூணாவது மாடியில கால் தடுக்கி விழுந்ததால ஒத்த காலு முறிஞ்சி போச்சு
அஞ்சி காசு இல்லாம சொந்த ஊரு வந்தாச்சு
அடகு வச்ச காணி நிலத்தை கிரயம் பேசி வித்தாச்சு
வட்டி கடன் அடைச்சதுல மிச்ச பணத்தை சேர்த்து வச்சு
ஒத்த பிள்ளையையும் வெளிநாடு போக ஆயத்தம் பண்ணியாச்சு
வெட்டிய சிறகோட அந்த புள்ளையும் வெளிநாடு போயிடுச்சு



கவிஞர் கங்கை மைந்தன்,தஞ்சை

# காதல் அனுபவம்

உன்னோடு உரையாடிய சிறு பொழுது
ஒருநாள் மட்டும் தான்
மகிழ்ச்சியில்
இருவரும் பரிமாறிக் கொண்டோம்.
உன்னிடம் நான் என்னிடம் நீ
இருவருக்குமான காதல் உணர்வுகளை
இதுதான் கடைசி உரையாடல்.
என்று இருவருக்கும் தெரியுமா?
மகிழ்ச்சியான தருணங்களில் அடுத்த நிகழ்வு.
எப்படி என்று
யாருக்கும் தெரிவதில்லை.
அன்று இருவரும் ஓர் சுகமான
உணர்வு அலைகளில் இருந்தோம்.
இன்று நீ ஒரு பக்கம்
நான் ஒரு பக்கம் என
பிரிந்து இருக்கிறோம்.
மாற்றம் ஒன்றே மாறாதது
பிரிவுகள் ஒன்றானால்
உறவுகள் ஒன்றாகும்.
சில காலம் பிரிந்து இருக்கலாம்
ஆனால் இருவர் உள்ளேயும் அன்று
உரையாடிய உரையாடலும்
அன்பும் ஒருதுளிக்கூட மாறா
உனக்காக நான் எனக்காக நீ
என்றே வாழ்கிறது.
நம் பிரிந்த காதல்
சேரும் திருமண பந்தமாக
காலம் கனிந்த பின்
பெற்றோர் ஆசி வழங்கி
நடக்கும் இருமனம்.
திருமண உறவு ஆவதே சிறந்தது.



அன்பு காதல் உறவானது சிறந்தது.
பெண் எனும் பெரும் சக்தி
சரியாக அமைந்தால் வெற்றி நிலைப்பெறும்.

கவிஞர் சி.சிவப்பிரியா,பொன்செய்

# பொன்மாலை பொழுது

அந்தி சாயும் நேரம்
ஆற்றங்கரை ஓரம்
என்னவளிடம், பேசுவதற்கு
ஆயிரம் கதைகள் இருந்தும்,
பேசாமல் நின்றேன் நான் !
வானமோ
சென்னிற ஆடை போர்த்திட
வட்ட நிலா ஒன்று எட்டிப் பார்த்திட
கீச் கீச்சென்று பறவைகளும்
காதோரம் கவிபாட
சில்லென்ற காற்றினிலே
சிங்கார கூந்தலும் அசைந்தாட
அவளின் முத்துபல் சிரிப்பிலும்
காந்தவிழி பார்வையின் அழகிலும்
என்னையே மறந்தேன்.!
பேசுவதற்கு வார்த்தைகள் இன்றி
மௌனம் என்னும்,
மொழியில் பேசிக்கொண்டு இருந்தேன்
என் கண்களால் உன்னிடத்தில்
இந்த பொன்மாலை பொழுதினிலே.!



கவிஞர் குணசுந்தரி சிவா,காஞ்சிபுரம்

# பிரியமான தோழி

அன்பிற்காக ஏங்கிய தருணத்தில்
அழகாய் வந்து அமர்ந்தாள் அருகிலே
யார் என்றே தெரியாத என் மேல்
அளவில்லா அன்பை காட்டிய உன்னத உயிர் நீயே
நானாக கேட்காமல் என் தேவையை
நிறைவேற்றும் அன்பு நெஞ்சம் நீயே
உன்னை தோழி என்பதா? தாய் என்பதா? என
தினம் தினம் என்னுள்ளே தோன்றி மறையும் வினா
பலமுறை என்னில் தாயாகவே பிரதிபலிக்கிறாய்
நாமோ பயணித்த நாட்களோ குறைவு நினைவுகளோ ஏராளம்
உன்னோடு சண்டை இடுவதெல்லாம் நம் அன்பின் வெளிப்பாடே
என்றுமே நீ என் மறு தாயடி பெண்ணே
என்னுள் சுவாசம் உள்ளவரை என் நேசம் உன்னில் தானே
என்றும் நீயே என் பிரியமான தோழி



கவிஞர் கோ.மஞ்சு,மருங்கூர்

# முயற்சி

தோல்வி உன்னை தொட்டு
அணைத்தாலும்
வெற்றி உன்னை
தட்டிக்கொடுத்தாலும்
கவலை உன்னை சூழ்ந்து
நின்றாலும்
வறுமை உன்னை விரட்டினாலும்
உன்னால் இயலாது என உலகமே
சொன்னாலும்
கால சூழ்நிலை சாதகமாக
இல்லாவிட்டாலும்
உனது இலட்சியத்தை அடைய
என்னை நம்பி பின் தொடர்
நான் வழிக்காட்டுகிறேன்
என்கிறது முயற்சி.



கவிஞர் மு.கணேஷ்,சேலம்

# காலம்

நேர்த்தியாக உதைக்கப்படுகின்ற
பந்துகள்தான்
நேரத்தில் இலக்கை அடைகிறது.

காலம் நம்மை பக்குவப்படுத்துவது
பலமாக்கவே தவிர வீணாக்க அல்ல.

மனதில் நம்மிடம்
குறைகள் நிறைந்ததால்தான் இன்னமும்.

காலத்தைக்
குறைக் கூறிக்கொண்டே இருக்கின்றோம்.



கவிஞர் சா.நாகூர் பிச்சை,திண்டுக்கல்

# பூமியில் நிலவு

மிக அதிவேகமாய் ஓடோடி வந்து
கால்களை பின்னிக்கொண்டு
அன்னார்ந்து வானம் பார்த்தபடி
சிரித்தாள் என் பொம்முக்குட்டி
பூமி பார்த்தபடி கண்டுகொண்டிருக்கிறேன்
முழு நிலவு!



கவிஞர் கனிராஜ் சௌந்திரபாண்டி,இராம்நாடு

# டி.எம்.சௌந்தரராஜன்

## உந்தன் இசையால் வசமாகா இதயமெது?

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்து மூன்று
மார்ச் திங்கள் இருபத்து நான்காம்நாள்
தூங்கா நகரமாம் மதுரை மாநகரில்
தொகுளுவ மீனாட்சி ஐயங்கார், வேங்கடம்மாள்
தம்பதிக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தவரே
கோடிக்கணக்கான உள்ளங்களைக் கொள்ளைகொண்ட டி.எம்.எஸ்!.
ஆலயங்களில், திருவிழாக்களில் ஐந்துவயது முதல்
ஒலித்தது இவரின் குரல்! பாகவதரின்
பாடல்களை அப்படியே பாடும் திறன்பெற்றிருந்தாரே!
தன்குரலில் பாடும் இவரைப் பாராட்டி
நல்லதொரு எதிர்காலம் இவருக்கு உண்டென்று
வாழ்த்திய பாகவதரின் வாக்கு மெய்யானதே!
அரை நூற்றாண்டுகள் இவர் குரல்
ஆட்சி செய்தது தமிழ்த் திரையுலகில்!
மகிழ்ச்சி, காதல் , கோபம், இயலாமை,
கழிவிரக்கம், ஊடல், கூடல்,பிரிவு
சோகம், நிலையாமை என அத்தனை
உணர்வுகளை அவர் குரலில் உணர்ந்தோமே!
எந்த நடிகருக்காகப் பின்னணி பாடினாலும்
அந்த நடிகரே பாடுவது போலிருக்கும்!
எல்லோர் வாழ்விலும் ஏதோவொரு தருணத்தில்
உள்ளத்தில் ஒலிக்கும் பாடலில் இவரிருப்பார்!
கணீரென்ற குரல், நேர்த்தியான உச்சரிப்பு
ஆண்மையுள்ள குரல் இவரின் தனிச்சிறப்பு!
பாடலின் பொருளுணர்ந்து பாவமுடன் பாடியதால்
பாடிய பாடல்கள் வாழ்ந்திருக்கும் எந்நாளும்!
கைகூடாக் காதலினால் சோகரசம் சொட்ட
கைபிடித்த நாயகியால் காதலில் கனிந்துருக
சிகரத்தைத் தொட்டார் உணர்வுகளை வெளிப்படுத்தி!
பாடகர் திலகம், சிம்மக் குரலோன், ஏழிசைமன்னர்
தெய்வப்பாடகர் இவையெலாம் மக்கள் இட்டபெயர்!
அகவை தொண்ணூற்று ஒன்றில் மறைந்தாரே!
நூற்றாண்டில் அன்னாரின் சாதனைகளைப் போற்றுவமே!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# கழறிற்றறிவார் நாயனார் / சேரமான் நாயனார்

## (பாகம் இரண்டு)

இரு அற்புத நிகழ்வுகள் நாயனார் மலைத்து நின்றார்
ஒரு பாணபத்திரர் மதுரையில் வறுமையில் வாடுகிறார்
திருமுகம் நாதனே கைப்பட தன் முகவரிக்கு எழுதியது
ஒரு முகமாக நாதனின் கையொப்பம் இட்டக் கடிதம்

மதுரையில் சிவனின் நடன சிலம்பின் ஓசை கேட்கும்
அதுவரை பூசைகள் முடித்து ஆடல் ஒலிக்க காத்திருப்பார்
இதுவரை நடன ஒலி கேட்டபிறகே திருவமுது உண்ணுவார்
மதுரையில் எழும் ஞானஒலி சேர நாட்டில் எதிரொலிக்கும்

சேரமான் சோழன் பாண்டியனோடு நல்லுறவில் வாழ
வரமான சிவத் தொண்டும் தினமும் சிறப்பாக நடந்து வர
பரமனின்பழக்கமான சிலம்பின் ஓசை அன்று கேட்கலை
சிரம் கலங்கிய நாயனார் அமுது உண்ணாமல் இருந்தார்

"என்ன பிழை செய்துவிட்டேன் யான் அறியேன் பராபரமே
அன்னம் ஒழித்த நான் இனி உயிர் வாழ்ந்து என்ன பயன்"
மன்னன் சட்டென உடை வாளை உருவி தன் நெஞ்சில் நாட்ட
"உன் குற்றமில்லை",தடுத்து சிலம்போசை கேட்கச்செய்தார்




"என் குற்றமே இது , நீ முன்போல் அமுது உண்பாயாக
வன் தொண்டன் ஒருவன் போற்றி பாடிய பதிகம் கேட்டேன்
உன்மத்தனாக பாடலில் மதி மயங்கி வாளா இருந்து விட்டேன்
உன் முன் தவறிழைக்க அடியார் சுந்தரரே காரணமாவர்."

"தங்களைப் பாடியே மயக்கும் மகானைக் காண விழைகிறேன்"
உங்கள் உள்ளம் கவர்ந்த அந்தக் கள்வனை எங்கு தரிசிப்பது
எங்கும் நிறைந்த சிவன் கூறினார்,"சோழ நாட்டுக்கு வா"
தங்கு தடையின்றி தன் பரிவாரங்கள் புடை சூழ புறப்பட்டார்

எது வாங்கினாலும் நல்லதா பொறுக்கிப் பார்த்து வாங்குகிறோம்
இது வெண்டை ஒடித்துப் பார்த்து பொறுக்கி எடுக்கிறோம்
இது தக்காளி சிவந்த பழமாக பார்த்து பொறுக்கி எடுக்கிறோம்
இது கமலா பழம் கைக்கு கனமானதா பார்த்து எடுக்கிறோம்

இது ஆப்பிள் நிறத்தின் அழகு செழுமை பார்த்து எடுக்கிறோம்
இது வாழ்க்கை நல்லதா பார்த்து நேர்ந்து வாழத்தெரியலையே
எது எப்படி இருந்தால் என்ன கெட்ட வழிகளைத் தேடி ஓடுகிறோம்
பதனழிந்த பொருளை விரும்பி முறைதவறி வாழ பழகுகிறோம்

நல்ல வழிகளைத் தேடி நாடி வாழ்ந்து காட்டியவர்கள் நாயன்மார்கள்
சொல்லவொண்ணா துன்பங்கள் வந்தாலும் நெறியோடு வாழ்ந்தார்கள்
அல்லல் பட்டாலும் கழறிற்று அறிய சோழநாடு வந்தார் கழறிற்றறியார்
வல்லாளன் சுந்தரரை திருவாரூரில் கண்டு அவர் பாதம் வணங்கினார்

"அன்புக்கு நான் அடிமை" என ஆரத்தழுவி கண்ணீர் மல்கினார்
ஒன்றுசேர்ந்து இருவரும் சிவத்தலங்கள் சென்று பாடி வழிபட்டனர்
"நின் காலடியே என் வழி", சுந்தரர் செல்லும் வழி சேரமான் சென்றார்
அன்று கயிலை செல்லும் நண்பனோடு இறையடி இணைந்தார்

முற்றும்

கவிஞர் ந.திருக்காமு

# உள்ளம் கவர்ச்சி

வெள்ளி முளைக்கும் போது
அள்ளிக் தெளிக்கின்ற
அவளின் கருங் கூந்தலின்
அழகை பார்த்தேன்.

பட்டு மேனியின் பளபளப்பு
அவள் இடையின் நாட்டியம்
நடமாடும் மேனிக்கு.
கருங் கூந்தலும் கவிதை பாடும்

சிட்டுக்குருவி போல
சிறகுகளை விரித்து
நடைப் பயலும் நாட்டியம்
அவள் பேரழகு.



அழகின் அர்த்தங்களை
அவள் அழகிய
விழிகளில்
அற்புதம் காண்பித்தாள்
ஆண்களின் போதைக்கு
அருமருந்தாக
அடிமையாக்கிட

கவர்ச்சி பெரும் ஆடையை
கருங் கூந்தலின் இளமை காட்டினாள்
வெள்ளி முளைக்கும் போதே
அமுதத்தை தெளித்தால்.

ஆண்கள் மது கிண்ணமாக
மாறி விடுகிறார்கள்
பருவம் கவர்ச்சியாய்
இங்கே ஆடையும் கவர்ச்சியான
நிலையில் வருவதற்கு
பெண்ணே காரணம்

பெண்ணின் உள்ளமே
பல ரகங்களில் மாறி போனதால்
கவர்ச்சி மது கிண்ணமாக
இங்கே உள்ளம் கவர்ச்சியான
நிலை உருவானது.

கவிஞர் தமிழருவி.ஏ.கோபி,நத்தம்

# உலக சுகாதார தினம்

எங்கெங்கு நோக்கினும்
அங்கெல்லாம்
ஆரோக்கியத்தை
வேரோடு சாய்க்கும்
ஊறு விளைவிக்கும்
(துரித) உணவுகள்.

ஓயாத ஓட்டம்
உணவு சமைக்க
இல்லை நாட்டம்.
கேடு தரும் என்று தெரிந்தே
வீடு தேடி வரும் உணவுகள்.




சுற்றுச்சூழலில்
சொல்ல முடியாத மாசு
மூச்சுத் திணறி
முதுகிலே( (ஆக்ஸிஜன்)சிலிண்டர்
கட்டித்திரிந்தாலும்
இயற்கையைக் காக்க
எங்களுக்கு நேரமில்லை.

நஞ்சு நிறைந்த
பானங்கள்.
உயிர்க்கொல்லி
உணவுகள்.
பொல்லாத கலாச்சாரத்தை
நோக்கிச் செல்லும்
புதிய தலைமுறைகள்.

பிஞ்சுகளின் உயிரைக் குடிக்கும்
நஞ்சு நிறைந்த
தின்பண்டங்கள்.

சுகாதாரம் பேணி
சுகமாக வாழ்வது
எங்ஙனம்?
சீரில்லாத பழக்கவழக்கங்களால்
சிதைந்து கொண்டிருக்கும்
ஆரோக்கியத்திற்கு.
சிறப்பாக
வாழ்த்துச் சொல்லி
என்ன பயன்?

கவிஞர் விஜயலக்ஷ்மி,தமிழாசிரியை

# மனோன்மணீயம் பெ.சுந்தரனார்

## (கட்டுரை)



- கேரள மாநிலம் ஆலப்புழையில் ( ஏப்ரல் 4, 1855) பெருமாள் - மாடத்தி அம்மாளுக்கும் பிறந்தார். தந்தையிடமே தமிழ் இலக்கியங்களை நன்கு கற்றார். தேவாரம், திருவாசகம் உள்ளிட்ட சமய நூல்களைக் கற்றார். 1876-ல் பி.ஏ. பட்டம் பெற்றார்.

- நாகப்பட்டினம் நாராயணசாமி பிள்ளை இவரது தமிழ் ஆசிரியர். கோடகநல்லூர் சுந்தர சுவாமிகளின் சீடர் இவர்.


- சட்டாம்பி சுவாமிகள், தைக் காட்டு அய்யாவு சுவாமி, நாராயண குரு ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். திருநெல்வேலி ஆங்கிலத் தமிழ்க் கல்விச் சாலையின் தலைவராக 2 ஆண்டுகள் பணியாற்றினார். அது பின்னர் இந்துக் கல்லூரியாக உயர உறுதுணையாக இருந்தார்.

- திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் தத்துவத் துறை ஆசிரியராகச் சேர்ந்தார். எம்.ஏ. தத்துவத்தில் பட்டம் பெற்றார். மகாராஜா அரண்மனையின் வருவாய்த் துறை தனி அலுவலராக நியமிக்கப்பட்டார். மகாராஜா கல்லூரி பேராசிரியர் ஹார்வியின் அன்புக்குரிய மாணவராகத் திகழ்ந்தார். 1885-ல் அதன் தலைமைப் பேராசிரியரானார். இறுதிவரை அங்கு பணியாற்றினார்.

# மனோன்மணீயம் பெ.சுந்தரனார்

## (கட்டுரை)

ஒ சிறந்த படைப்பாளி. இந்திய, மேற்கத்திய தத்துவம் தவிர, வரலாறு, தொல்பொருளியல், இலக்கியம், நவீன அறிவியல் ஆகிய துறைகளிலும் ஆர்வம் கொண்டிருந்தார். 'நூற்றொகை விளக்கம்', 'திருவிதாங்கூர் பண்டைய மன்னர்கால ஆராய்ச்சி' உட்பட 20-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.




ஒ 'மனோன்மணியம்' என்ற நூலை 1891-ல் எழுதினார். கவிதை நாடக வடிவில் அமைந்த மனோன்மணியம், 4,500 வரிகள் கொண்டது. அதில் 'நீராருங் கடலுடுத்த' எனத் தொடங்கும் பாடலை தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாக தமிழக அரசு 1970-ல் அறிவித்தது.

ஒ ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்தார். 'தமிழ் இலக்கிய வரலாற்றில் சில மைல்கற்கள் (திருஞான சம்பந்தரின் காலம்)' என்ற ஆங்கில நூலை எழுதினார். பத்துப்பாட்டு பற்றிய திறனாய்வு நூலை ஆங்கிலத்தில் எழுதினார்.

ஒ பத்துப்பாட்டின் 3 அங்கங்களான திருமுருகாற்றுப்படை, நெடுநல் வாடை, மதுரைக் காஞ்சி ஆகியவற்றை 'தி டென் தமிழ் ஐடியல்ஸ்' என்ற நூலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். 'ஜீவராசிகளின் இலக்கணமும் பிரிவும்', 'மரங்களின் வளர்ச்சி', 'புஷ்பங்களும் அவற்றின் தொழில்களும்' ஆகிய அறிவியல் நூல்களை எழுதினார்.

ஒ கல்வெட்டு ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டார். திருவிதாங்கூர் அரசர்களின் மரபு பற்றி ஆராய்ந்து எழுதிய நூலை 1894-ல் வெளியிட்டார். சென்னை கிறிஸ்தவக் கல்லூரி இதழில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டார்.

# மனோன்மணீயம் பெ.சுந்தரனார்

(கட்டுரை)

௸ மற்ற மொழிகளையும் இவர் ஒதுக்கியதில்லை. திருவனந்தபுரத்தில் சைவப்பிரகாச சபையைத் தோற்றுவித்து சமயத் தொண்டும் ஆற்றிவந்தார். 'ராவ் பகதூர்' உள்ளிட்ட பல பட்டங்கள் பெற்றுள்ளபோதிலும், தான் எழுதிய நூலின் பெயரால் 'மனோன்மணியம்' சுந்தரம் பிள்ளை என்று போற்றப்பட்டார்.

௸ 19-ம் நூற்றாண்டின் தலைசிறந்த தமிழ் நாடக நூலை எழுதியவரும், கல்வெட்டு ஆராய்ச்சி, தத்துவம், அறிவியல்முறை ஆய்வுகள், நூற்பகுப்பு முறைகள், இலக்கிய ஆய்வு எனப் பல களங்களில் மகத்தான பங்களிப்பை வழங்கியவருமான பெ.சுந்தரம் பிள்ளை 1897 ஏப்ரல் 26-ம் தேதி 42-வது வயதில் மறைந்தார்.



நன்றி : விக்கிபீடியா


அகர முதல நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
முடிந்த பிரச்சினைகளை
நினைத்து கவலை
அடைவதை நிறுத்தி விட்டு
வரும் காலத்தை துணிந்து
தன்னம்பிக்கையுடன்
எதிர்த்து நில்லுங்கள்.
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.

தொடர்பிற்கு:
9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com